

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
24-வது மகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

415

உ

திருச்சிற்றம்பலம்

# திருக்குறுக்கைத் தலவரலாறு

இஃது

இவ்வாலய பரம்பரைத் தருமகர்த்தா

தருமபுர ஆதீன

24-வது மகாசந்நிதானம்

**ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய**

**சுவாமிகளின்**

திருவுள்ளத்தின்படி

குறுக்கை

**ஸ்ரீ வீரட்டேசுவர சுவாமி தேவஸ்தானத்தில்**

வெளியிடப்பெற்றது.

**1943**

[விலை அணா 2.

# பொருளடக்கம்


| | பக்க எண் |
|---|---|
| தலமும் இருப்பிடமும் | 1 |
| தலப் பெயர்கள் | ,, |
| கோயிலமைப்பு | 2 |
| மூர்த்திகள் | 3 |
| தலப்பெருமை | ,, |
| புராணவரலாறு | 5 |
| தீர்த்தங்கள் | 20 |
| தலவிருட்சம் | 21 |
| வழிபட்டோர்கள் | ,, |
| சுற்றுக் கோயில்கள் | ,, |
| மண்டபங்கள் | ,, |
| சிற்பங்கள் | 22 |
| நித்திய பூஜைகளும் திருவிழாக்களும் | ,, |
| சொத்துக்கள் | ,, |
| திருப்பணி | ,, |
| சமயப்பணி | 23 |
| நிர்வாகம் | ,, |
| கல்வெட்டுக்கள் | 24 |
| புராணங்களும், திருப்பாடல்களும் | ,, |
| திருப்பாடல்களில் காணும் சில வரலாறுகள் | 27 |

திருச்சிற்றம்பலம்

# திருக்குறுக்கைத் தலவரலாறு

## 1. தலமும் இருப்பிடமும்

தன்னடைந்தார்க்கு இன்பமளிக்கும் இறைவன், நெய்யும் பாலும் நீரும் அலருங் கொண்டு ஆட்டி அருச்சித்து காதற் கசிவொடு கனிந்து உருகும் ஆன்மாக்களுக்குப் பழவினை தீர்த்துப் பொன்னு மெய்ப்பொருளும் போகமும் திருவும் இம்மையிற் கொடுத்தும், மறுமையில் சுவையமுதூட்டி அமரர்கள் சூழிருப்ப அளித்தும் அருள் பாலிப்பான் வேண்டி கோயில்கொண்டு எழுந்தருளியிருக்குந் தலங்கள் மிகப்பலவாகும். அவைகளுள் சோணாட்டிடையில் விளங்குவனவற்றுள் **குறுக்கை** என்பதும் ஒன்று. தஞ்சை ஜில்லா மாயூரம் தாலூக்காவில் உள்ளது. மாயூரத்துக்கு வடக்கேயுள்ள நீடூர் புகைவண்டி நிலையத்திலிருந்து வடமேற்கே சுமார் 5 கல் தொலைவில் விளங்குகிறது. மட்சாலைவழியாகச் செல்லலாம்.

## 2. தலப்பெயர்கள்

கடுக்காமரம் தலவிருட்சமாதலின் **கடுவனம்** எனவும், இறைவர் அம்மையாரைப் பிரிந்து

யோகஞ்செய்த இடமாதலின் **யோகீசபுரம்** எனவும், காமனைத் தகித்த இடமாதலின் **காமதகனபுரம்** எனவும், இலக்குமியினது கம்பத் (நடுக்கத்) தைப் போக்கியதாகலின் **கம்பகரபுரம்** எனவும், தீர்க்க வாகு முனிவர் இத்தலத்து வந்து இறைவனை அபிடேகித்ததற்குக் கங்காநீரினை விரும்பித் தனது கரங்களை நீட்டக் கரங்கள் நீளாது குறுகினமை யால் **குறுக்கை** எனவும் பெயர்கள் வழங்கப் படுகின்றன.

மற்றும் அரிதகிவனம், ஞானம்பிகைபுரம் முதலிய பெயர்களும் புராணத்திற் காணப்படு கின்றன. (அரிதகி—கடுக்காய்)

## 3. கோயிலமைப்பு

நாற்புறமும் திருமதில்களால் சூழப்பெற்று மேற்கு நோக்கிய சந்நிதானமாக விளங்குகிறது. இரண்டு பிராகாரங்கள் இருக்கின்றன. அம்மை யார் தெற்கு முகமாக எழுந்தருளி யிருக்கின்றார். அவருக்குத் தனியாலயம் அமைக்கப்பட்டிருக்கிறது. முன்புறம் பெரியவௌவால்நெற்றி மண்டபம் இருக் கிறது. தென்மேற்கு மூலையில் களஞ்சியமும், காரியாலயமும் இருக்கின்றன.

உட்பிராகாரத்தில் மேல்புறம் திருமாளிகைப் பத்தியில் உற்சவ மூர்த்திகளும், வள்ளிதெய்வானை யுடன் கூடிய சுப்பிரமணியர் மூலவரும், இலக்

குமியும் எழுந்தருளி யிருக்கின்றார்கள். கிழக்குப் பிராகாரத்தில் பைரவர், சனீஸ்வரர், விஷ்ணு, சூரியன், சந்திரன், நவக்கிரகங்கள் ஆகிய மூர்த்திகள் பிரதிட்டையாகி இருக்கின்றனர். அப் பிராகாரத்தில் தலவிருட்சம் விளங்குகிறது. தெற்குப் பிராகாரத்திலேயே தனிக்கோயிலாக குறுக்கை விநாயகர் குறுக்கை முனிவருடன் விளங்குகின்றார்.

சுவாமி கர்ப்பக்கிரகத்தின் வெளிப்புறத்தில் துர்க்கை, பிரமன், இலிங்கோற்பவ மூர்த்தி, தக்ஷிண மூர்த்தி, நர்த்தன கணபதி முதலியன பிரதிட்டை செய்யப்பட்டிருக்கின்றன. யோகீசுவரர் அம்மையார் சகிதமாக எழுந்தளியிருக்கின்றார்.

## 4. மூர்த்திகள்

இறைவர் திருநாமம் **வீரட்டேசுவரர்.** அம்மையார் திருநாமம் **ஞானம்பிகை.** சம்ஹாரமூர்த்தியின் திருநாமம் (உற்சவர்) **யோகீஸ்வரர்.** அம்மையார் **பூர்ணி யம்மையார்.** இது காமதகனபுரம் ஆதலின் காமன் அவன் மனைவி இரதி ஆகிய இருவர்களுக்கும் உற்சவ மூர்த்தங்கள் யிருக்கின்றன.

## 5. தலப்பெருமை

அட்டவீரட்டத்தலங்களுள் ஒன்று. இத்தலத்துச் சபை காமனங்கநாசனிசபை எனப்பெயர்

பெறும். சம்புவிநோதசபை* எனவும் வழங்கும். இறைவன் உமையம்மையாரைப் பிரிந்து யோகத் தமர்ந்த பெருமை மிக்கது. குறுங்கை விநாயகர் எழுந்தருளி அன்பர்கட்கு வேண்டும் பேறுகளைக் கொடுத்து அருள்பாலிப்பது.

கரும்பு வில்லினையுடைய காமனை எரித்து, இரதி போற்ற நெடுமால் இரப்ப மீட்டும் உயிர் கொடுத்தருளியது; இலக்குமிக்கு உளதான நடுக்கத்தை நீக்கியது; அசுரர்களை வெற்றி கொள்வதற்காக முருகக்கடவுள் வந்து பூசித்துச் சூலாயுதம் பெற்றது; இராகவன் வழிபட்டுப் பிதிர்க்கடன் ஆற்றியது. தீர்க்கவாகு முனிவருக்குக்கரம் குறுகச்செய்தது. வாணாசுரனுக்கு அஞ்சிய மகாவிஷ்ணுவுக்கு அபயமளித்தது; திருமுடி கண்டேன் எனப் பொய் கூறிய பிரமனுக்கு இறைவன் படைப்புத் தொழிலை நீக்கப் பிரமன் அஞ்சி வழிப்பட்டுப் பூசித்து இழந்த படைப்புத்தொழிலை மீட்டும் பெற்றது; சோழநாடு முழுதும் நெல் விளையவேண்டு மென்று விரும்பிய சயத்துவசனுக்கு அவன் விருப்பின்படியே அருள்பாலித்தது; அகத்திய முனிவரால் பூசிக்கப் பெற்றது; காளியும் துர்க்கையும் காவல்புரிவது; இரதியும் காமனும் வழிபட்டது; ஆகிய பல பெருமைகளையுடையது.

---

* வேதாரணிய புராணம் சபைச்சருக்கம் 6-ம் பாடல்.

## 6. புராணவரலாறு

**யோகீசுவரர்:—** தவவலிமை மிக்க தக்கன் என்பவன் உலகமுழுதும் ஒருங்கீன்ற உமையம்மையாரைப் புதல்வியாகப் பெற்று அப்புதல்வியை இறைவனுக்கு மணஞ் செய்து கொடுத்தான். பின்னர் ஊழ்வினைப் பயனால் இறைவன் பெருமையினை யுணராது தனக்கு மருமகனென்ற முறையைக் கருதி அவரது திருவடிகளை வணங்காதாயினன். மேலும் தக்கன் சாபத்தினைப் பெற்ற சந்திரனுக்கு அச்சாபத்தை நீக்கி இறைவன் அருள்பாலித்தது தக்கனது கோபத்தீயினை வளர்த்தது. அதனால் இறைவனை இகழ்ந்து கூறத் தொடங்கினான். சிவபிரானை நீக்கி ஓர் யாகமுஞ் செய்ய எண்ணினான். அதற்காக அவன் வேண்டுகோட்படி விஷ்ணு, பிரமன், இந்திரன் முதலிய தேவர்களும், முனிவர்களும், வந்து சூழ்மினர். தக்கன் யாகத்தைத் தொடங்கிச் செய்வானாயினான்.

உமையம்மையார், தமது கணவரை அவமதித்து யாகஞ்செய்கின்றானே தக்கன் என்பதைக் கருதாது தந்தை என்ற ஒரு முறையைக் கருதி இறைவனிடம் சென்று "நாமும் யாகத்திற்குப் போகவேண்டும்" என்றனள். அதுகேட்ட இறைவன் "தானே பெரியோன் எனக் கருதியிருக்கும் தக்கன் யாகத்திற்குச் செல்லல் தகாது" எனப் பலவாறாகக் கூறியும் உமாதேவியார் உடன்

படாததைக் கண்டு அம்மையாருபின் விடையின் மீது ஏறிப் புறப்பட்டார். யாகசாலையை அணுகினர். இவர்களைக்கண்ட தக்கன் எருதேறி, சுடலையாடி முதலாகிய பலவார்த்தைகளால் இகழ்ந்து கூறித் தேவர்களையும், முனிவர்களையும் நோக்கி "யானும் இவனைத் துதித்திடேன்; நீரும் கும்பிடீர்" என்றான். இறைவன் அம்மையாரை நோக்கி, "முன்னர் யான் கூறியதை இப்போதுணர்க" என்ன, அம்மையார் வெகுண்டு தக்கனை நோக்கி "புரிதரு மகமும் நீயும் பொருக்கெனக் கெடுக" என்று சபித்துத் திருவுருக்கரந்தனள்.

இறைவர் தாமும் வெகுண்டார். நெற்றிக் கண்ணினின்றும் கைகள்படைகள்தாங்க, கண்கள் தீப்பொறிசிதற வீரபத்திரப் பெருமான் தோன்றினர். வீரட்டகாசஞ்செய்தார். யாவரும் உயிர் துறந்தார்கள். இறைவர் இறுதியாக மாண்டவர்களுக்கு உயிரை நல்கி இத்தலத்து வந்து கடும்ர நீழலிலமர்ந்து யோகஞ் செய்வாராயினர். இதனல் இறைவர் யோகீசுவரர் எனத் திருநாமம் பெற்றார்.

திருவுருமறைந்த உமையம்மையார் இமவானுக்குப் புதல்வியாக அவதரித்தாள். ஏழாண்டு நிறைந்தன. கயிலைக்கிறைவனையே மணம் செய்துகொள்ள விருப்பமுற்றுத் தவமியற்ற எண்ணினள். எவ்வாறு இறைவன் யோகத்தமர்ந்தானே இறைவியும் அவ்வாறே யோகத்தமர்ந்தாள் என்று சொல்லும்

படியாகத் தவத்தில் அமர்ந்தாள். அதுகண்ட இறைவன் இத்தலத்தை யகன்று அம்மையார் திருமுன் விருத்த உருவொடு தோன்றி "தவஞ் செய்யுங் காரணம் யாது?" என வினவினர். "கடல் விட முன்னுண்ட பிரான்றனை மணப்பத் தவம் புரிவேன்" என்றாள். "மணம்புரிவது கருத்தாயின் என்னை மணந்துகொள். தவஞ்செய்து உடம்பை வருத்தும் பருவம் இதுவன்று" என்றார் இறைவர். கொடிய மொழியினைக்கேட்ட அம்மையார் "என்ன சொன்னாய், அப்புறம் செல்க" எனக் கோபிக்க, இறைவன் தமது பழைய வடிவத்தைக் காட்டினர். தேவியார் "தேவரீர் பிழைபொறுத்து அருள் புரியவேண்டும்" என்று பணிந்து நின்றனர். இறைவர் மகிழ்ந்து "நன்று, நீ நினைத்தவாறே மணஞ்செய்து கொள்வாம்" எனநவின்று திருவுருக் கரந்து முன்போலக் கடுமரநீழலில் யோகத்தமர்ந்தார். தேவியாரும் இருப்பிடஞ் சார்ந்து இறைவன் தனக்கு அருளிச்செய்த திருவாக்கொன்றனையே நினைந்திருந்தார்.

**காமதகனம்:—** உலக காரணர்களாகிய அம்மை, அப்பர் இருவரும் யோகத்தமர்வார்களானல் உலகில் எச்செயல்கள்தான் நடக்கும்; யாவரும் காமநுகர்ச்சியை மறந்தனர். துறவியொத்திருந்தனர். இந்நிலையில் சிங்கமுகன், தாரகன் முதலிய அசுரர்கள் வானநாடுபுக்கு வானவர்களைத் துன்புறுத்தத் தலைப்பட்டனர். பொருள்களைக் கவர்ந்

தனர். உலகங்களைத் தன்னடிப்படுத்தினர். இவ்வாறாய இடர்களைப் பொறுக்க முடியாத தேவராதியோர் தம் குருவிடஞ்சென்று "யாங்கள் இவ்வாறு வருந்தக் காரணம்யாது? மாரன் எங்கொளிந்தான்; அல்லது இறந்துவிட்டனனோ? ஒன்றும் உணரோம்" என்றார்கள். அதுகேட்ட குரு "முன்பு இறைவனை இகழ்ந்தொதுக்கி இயற்றப்பட்ட யாகத்தில் நீங்களும் கலந்து கொண்டீர்கள். அப்பாவங் காரணமாக இத் துன்பத்தை அனுபவிக்கின்றீர்கள். கடுவனத்தில் யோகத்திருக்கும் கண்ணுதல் எழுந்து இமவான் மகளை மணம்புணர்வானாயின் அறுமுகக் கடவுள் தோன்றுவன். அப்போது அம்மகவால் உங்கள் துன்பம் ஒழியும்" என்றார். உடனே தேவர்கள் "அவ்வாறாயின் கண்ணுதல் யோகத்தைக் கலைத்து இமவான்மகளை அவாவுறச் செய்வதற்குரிய வழியாது? உரைமின்" என்ன, வியாழபகவான் "இரதியோடு காமன்வருக" என எண்ணினன். இருவரும் தோன்றினர்.

இந்திராதியோர் காமனைநோக்கி உபசார மொழிகள் கூறி இறுதியில் "நீ கடுவனஞ் சென்று யோகிருக்கும் இறைவன் உமையைச் சேரும்படிச் செய்வாய்" என்றார்கள். அதனைக்கேட்ட காமன் "நன்று! நன்று!! உமது யோசனை; என்னை அழிக்க எண்ணினீர்போலும். இறைவனோடு மாறுபாடு கொண்டு அவன்முன் சென்றோர் யாவராயினும் தப்புதல் முடியுமோ? விழித்து நோக்கின் உலகமே

அழியும். ஆதலின் நீவிர் அவ் விறைவனை வணங்கித் துதித்து வேண்டியது பெறுவீர்'' என்றான். தேவர்கள் மறுபடியும் "மாரனே! விஷ்ணு பிருந்தையைச் சார்வதற்கும், பிரமன் திலோத்தமையைச் சார்வதற்கும் காரணம் நீயல்லையோ? உன் பெருமையும் வலியும் சொல்வதற்கடங்கா'' எனப் பலவாறாகப் புகழ்ந்து கூறிப் போகும்படி செய்தனர். காமனும் உடன்பட்டு எழுந்தான். மனைவியாகிய இரதி "தலைவ! இமையவர்கள் சொற்கேட்டு நீ புறப்படுதல் தகாது. தீங்குவிளைதல் உறுதி'' என்று தடுத்தாள். "வானவர் வருந்துகின்றார்; தடுத்தல் தகாது'' எனக்கூறி எழுந்தான் காமன். பிரிவாற்றாத இரதியும் உடனெழுந்தாள். இத்தலத்துவந்தார்கள். காமன் இறைவரது திருமுன் நின்று கரும்புவில்லை வளைத்து, மலர்ப்பாணத்தை எய்தான்.

நிகழ்ச்சிகள் யாவற்றையும் உணராதுணர்ந்த கருணைவள்ளல் "விழித்து நோக்கின் இவன் எரிந்து சாம்பராகுவனே'' என்று மனமிரங்கி மேல்புறம் திரும்பினார்†. முன்னின்றால் எரிந்து விடுவோமென எண்ணிய காமனும் மேல்புறம் வந்தான். கண்ட இறைவர் புன்முறுவல் செய்து "மார! நடப்பது

† இவைகளுக்கு அடையாளமாக கீழ்புறமும் மேல்புறமும் நந்தி பலிபீடம் அமைந்திருப்பதும், இறைவரது (சிவலிங்கத்தினது) திருவுருவில் மலர்போன்று வடிவம் இருப்பதும் இன்றும் காணத்தக்கது.

சிறிதும் உணராமல் என்செய்தாய். யாம் மயங்குவதைப் பார்ப்பாய்'' என்று கூறிச் சிறிது நெற்றிக் கண்ணைத் திறந்தார். திறத்தற்கு முன்னமேயே அஞ்சின காமன் நடுங்கிச் சிறிது தென்புறம் ஓடினன். நுதல்விழிச் செந்தீ நேருறப்பட்டது. உடம்பு சாம்பலாகியது. இரதம், கொடி முதலியனவும் எரிந்தன.

[காமன் பாணமெய்வதைப் பார்க்கவந்த தேவர்கள் கூடி இருந்த இடம் **தேவானூர்** எனவும், காமன்போர் தொடங்கற்குக் கங்கணம் கட்டியவிடம் **கங்கணம்புத்தூர்** எனவும், வில்வளைத்த இடம் **வில்லியநல்லூர்** எனவும், கால்வளைத்துக் குறிபார்த்தவிடம் **கால்வளைமேடு** (காவாளமேடு) எனவும், பஞ்சபாணம் எய்ய நின்றவிடம் **பஞ்சபாணநல்லூர்** (ஐவா நல்லூர்) எனவும், சோர்ந்து வீழ்ந்தஇடம் **சோத்தமங்கலம்** எனவும், கூற்றுவன் வசித்த இடம் **கூற்றுவன்வாழ்க்கை** (கூத்தூர்வாழி) எனவும் இன்றும் பெயர்கள் வழங்கப்படுகின்றன.]

கண்டாள் இரதி. மயங்கி வீழ்ந்தாள். "கண் கவரும் வடிவமைந்த கட்டழகா! சம்பரனைவென்ற வீரா! எங்குற்றாய்? போருக்குப் புறப்படுங் காலத்திலேயே போதல் தகாதென்றேன். கேட்கவில்லையே. பிரமாதி தேவர்கள் வார்த்தையினை வீணேகேட்டுத் திருவுருவமிழந்தனையே! அந்தோ; நான் என்செய்வேன்'' என்று புலம்பினாள். தேவர்கள் முதலியோர் கூடினர். அவர்களைக் கண்டவுடன் வருத்தம்மேலிட "என்கணவன் உயிரையிழக்கச் செய்தீர்களே. நீங்களெல்லோரும் வாழுங்

கள். இது உமக்கு நல்லதோ?'' என்றாள். அப்போது விஷ்ணு "யாமொன்று எண்ணத் தெய்வமொன்றெண்ணியது. எப்படியாவது இறைவனைத் தொழுது காமனை உயிர்பெறச் செய்வோம். அஞ்சற்க. நீயும் பரமனைக்கருதித் தவமியற்றுக. நாமும் செல்கின்றோம்'' என்று கூறித் தேவர்களை உடன்கொண்டு இறைவன்பாற் சென்று தொழுது தோத்திரம் செய்தார்கள். இரதியும் தவம்புரியத் தொடங்கினன்.

துதிசெய்யும் தேவராதியோர்களுக்கு இறைவன் காட்சியளித்து "வேண்டியது யாது?'' என "மடவாரின்பம் உற்றிலேம். மேலும் பகைவர்களால் துன்புறுகின்றேம். இக்குறைதீர உமையவளை மணம்முடித்து அறுமுகக்குமரனைத்தோற்றி அருள் பாலிக்க வேண்டும்'' என்றார்கள். இறைவனும் "அவ்வாறே செய்வோ'' மென அருளிமறைந்தனர். தேவர்களும் இருப்பிடம் சார்ந்தார்கள்.

**காமன் உயிர்பெற்றது:—** தேவர்கள் வேண்டுகோளைச் செவிமடுத்த இறைவர் இமவான்மகளைத் திருமணம் புரிந்து, திருமணத்திற்கு வந்திருந்த தேவர் முனிவர் முதலியோர்களுக்கு விடைகொடுத்து இமையமகன்று கயிலைக்குச் செல்வாராயினர். விஷ்ணு பின்றொடர்ந்தனர். அதுகண்ட இறைவன் என்னுடன்வரும் காரணம் யாதென, "கருணைமூர்த்தியே! புத்திரசோகத்தால் நாயேன்

மெலிவது நன்றோ?" என விண்ணப்பித்தனர். இறைவன் "நீ கடுவனம் சென்று, அங்கு எம்மைக் குறித்துத் தவஞ்செய்யும் இரதியுடன், புதல்வன் இறந்த சாம்பர்மேட்டைச் சேருதி. அச்சாம்பரை ஒருருவாகச் செய்து சூலதீர்த்தத்தை அதன்மேற் றெளி. அப்போது மாரன் இரதிதேவிக்கு உருவுடன் தோன்றுவான். மற்றையோர்களுக்கு அருவமாகத் தோன்றுவான்" என்று அருள்செய்தார்.

விஷ்ணுவும் அவ்வாறே இத்தலத்து வந்து நீராடி இறைவனை வணங்கி, இரதியிடஞ் சென்று இறைவன் அருளிச்செய்ததைக் கூறி உடன் கொண்டு வேள் வெந்த களம் அடைந்தார். சாம்பரை உருவமாகச் செய்தார். அவ்வுருவினைத் தமது கையிலேந்திக் கொண்டுவந்து சூலதீர்த்தக்கரையில் வைத்து இறைவன் திருவடியை மனத்தில் தியானித்துத் தீர்த்தத்தை அள்ளித் தெளித்தார். காமன் உயிர்பெற்றெழுந்தான். கண்ட இரதியும் உவப்புடனே தழுவினள். உடனிருந்த விஷ்ணுவோ தீர்த்தம்படுவதற்கு முன்னுள்ள சாம்பர் உருவத்தையும் கண்டிலர். பின் உண்டான காமனுருவத்தையும் கண்டிலர். பின் கண்டதுதான்யாது? இரதி துன்பம்நீங்கி யிருத்தலையே கண்டார். இறைவன் அருளை எண்ணினர். உயிர்பெற்றெழுந்த காமன் இரதியுடன் புனலாடி இறைவனையும் இறைவியையும் வழிபட்டான்.

**தீர்க்கவாகு முனிவர்:—** இமயமலையில் வசித்து வந்தவர். வீபூதியும் உருத்திராக்கமுமே ஆபரணமாகக் கொண்டவர். பந்தமறுத்து முத்தியின்பம் பெறுதற்கேது சிவபிரான் திருவடி காண்டலே எனவும், அக்காட்சிக்கேது தலங்கள் தோறுஞ் சென்று பெருமானை வணங்குதலே எனவும் கருதுகின்றவர். ஒருநாள் முனிவர் தாம் எண்ணியவாறே தலயாத்திரைசெய்து முடித்தற்கு ஒருப்பட்டெழுந்தார். கேதாரம், திருக்கோகர்ணம், குருக்ஷேத்திரம் முதலிய தலங்கள் பலவற்றை வணங்கிக்கொண்டு வருகின்றார். அம்மையார் தழுவக்குழைந்த காஞ்சி, ஆரூரர் சங்கிலியாரை மணந்த திருவொற்றியூர், அவருக்குத் தவநெறி தந்த திருத்துறையூர், குலவுமறைப் பெருமான் கூத்தாடும் சிதம்பரம் முதலாகிய பலதலங்களைக் கடந்தார்.

இறுதியாக இத்தலத்திற்கு வந்தார். தன்னையறியாமலே மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினார். நினைத்த மாத்திரையே வினைமுழுது நீறாக்கும் நெடுஞ்சூலத் தடம் படிந்தார். நித்திய கடன்களை முடித்தார். கடுநிழலில் அமர்ந்திருக்கும் கண்ணுதற்பெருமானைக் கண்டார். நிலமுறப்பணிந்து எழுந்து கூத்தாடித் தோத்திரித்தார். தனக்குக் கரம் நீண்டிருப்பதால் செல்லும் தலங்கடோறும் ஆகாயத்தில் கையினை நீட்டி ஆகாயகங்கையினை முகந்து இறைவருக்கு அபிடேகிப்பது வழக்கம். அவ்வழக்கப்படியே இத்தலத்திறைவனை அபிடேகிப்பதற்குத் தனது கரங்

களை மேலே நீட்டினர். கைகள் குறுகின. "தலங்க டோறும் செய்துவந்த நியதி இங்குத் தவறியதே; என்ன பிழை செய்தோம்? ஈசனே! இது தகுமோ?" என மனம் புழுங்கினர். இவ்விக்கினத்தைத் தீர்த் தருளுபவர் விக்கினேசுவரரே என உணர்ந்தார். விநாயகரிடம் சென்றார். "அடியவர் விக்கினம் தீர்க்கும்ஐயனே! சிவபூசைக்கு விக்கினம் நேர்ந்தது. அடியேனது நீண்ட கைகள் குறுகின" என்று விண்ணப்பித்துப் பணிந்தார். விநாயகர் முனிவரை நோக்கி "வருந்தாதொழி; யாமும் அவ்வாறே இருக் கின்றோம்! நீயே பார்" என்றருளினர். அதுகண்ட முனிவர் இத்தலத்தி னியல்பிதுவோ எனக் கலங்கி உயிர்விடுதல் நலமெனக்கருதி ஓர்கல்லிடைத் தன் தலையை மோதினர். திருக்குறிப்புத் தொண்டருக்குக் கை எழுந்ததுபோல் கல்லிடைத் திருக்கரந் தோன்றியது. கண்டு அதிசயித்தார். கல்லினுக்கும் கைநீளு மித்தலத்தோ அடியேன் கை குறுகுவது. காரணம் யாதோ? உணரமுடியவில்லையே என இரங்கியபோது, இறைவர் அம்மையாரோடு இடப வாகனத்தில் காட்சியளித்து நின்றார். கண்டார் முனிவர். பணிந்து வீழ்ந்தார். உவகைக் கடலில் ஆழ்ந்தார். அன்பினல் தோத்திரஞ் செய்தார். துதியினைச் செவிமடுத்த இறைவர் திருமுகமலர்ந்து "விரும்பியது யாது? கூறுக" என்றனர். "அரசர் வாழ்வும் அமரர் இருக்கையும் வேண்டேன். பரம! நின் திருவடிக்கலப்பு ஒன்றனையே வேண்டுவன்" என்றார் முனிவர். இறைவனும் "நீ நினைந்தவாறே

சிலநாட் பூசனை புரிந்து பெறுக" என்றனர். முனிவர் பணிந்து "அடியேன் கையினைக் குறுக்கியதென்னை?" என்று கேட்ப, இறைவன் "யாம் அம்மையாரை நீங்கி யோகஞ்செய்தபோது நம் சூலத்தால் உண்டாக்கப்பட்ட தீர்த்தம் இது. ஆதலின் கங்கையினும் இது சிறந்தது. நீ அதனை யுணராமல் கங்கா நீரினை விரும்பிக் கையினை நீட்டினாய். அதனால் குறுக்கினோம். இன்றுமுதல் உனக்குக் **குறுங்கை முனி** என்றும், எமது குமாரராகிய விநாயகருக்குக் **குறுங்கை விநாயகர்** என்றும் பெயர் எய்துக. இத்தலத்துக்கும் இப்பெயர் வழங்குக" என்றருள்செய்து மறைந்தனர். தீர்க்கவாகு முனிவராகிய குறுங்கை முனியும் இறைவன் அருளியவாறே சூலதீர்த்தத்தினால் இறைவனை அபிடேகித்துப் பூசித்து இறைவன் திருவடியிற் கலந்தனர்.

**சயத்துவசன்:—** இவன் சோழநாட்டரசன். காளியுபாசனை யுள்ளவன். இவன்காலத்தில் சோழநாடு காடாயிருந்தது. அதில் வரகு முதலிய பொருள்கள் விளையுமே யன்றி நெற்பயிர்கள் விளையா. இவ்வரசன் தேவராதியோர்களுக்கு அமுதாக்கி நிவேதிப்பதற்கு நெல்வேண்டுமென எண்ணினான். அதற்காக வரம்பெறுதற்குக் காசித் தலத்தை யடைந்தான். விசுவநாதரையும், அன்னபூரணியம்மையாரையும் வணங்கினான். அத்தலத்திலேயே சிலநாட்கள் தங்கி கங்கையில் நீராடி

இறைவனை வழிபட்டுவந்தான். ஒருநாள் அம்மையார் காட்சியளித்து "நீ விரும்பியது யாது? என்றனள். அரசன் "எம்பெருமாட்டியே! சோழ நாட்டில் நெல்விளைவு என்பதே இல்லை. அக் குறையினை நீக்கியருளவேண்டும்" என்று விண்ணப்பித்தனன். செவிஏற்ற அம்மையார் "விசுவேசரும் யாமும் கடுவனத்தில் யோகீசராயும் ஞானம்பிகையாயும் அமர்வோம். அங்குச் சென்று சூலதீர்த்தத்தில் நீராடி வழிபடுவாய்; அப்போது விரும்பியது பெறுவாய்" என்றனள். அரசன் மறுமுறை வணங்கி "அம்மையே சோழநாடு காடாயிற்றே. எவ்வாறு அவ்விடத்தை யறிவேன். அருளிச்செய்ய வேண்டும்" என்ன, மீட்டும் அம்மையார் "அன்பனே! உன் உபாசனை மூர்த்தியாகிய காளியை முன் விட்டுப் பின்தொடர்ந்து செல்க; அப்போது அவளது மேனியிலுள்ள மணியோசையுமற்று, அழற்கொழுந்தும் எங்கு மறைகின்றதோ அவ்விடமே நாம் குறித்த இடம்" என்றருளிச்செய்தனள்.

அப்பொழுதே அரசன் காளியை நினைந்தான். அவளும் மணிகள் ஒலிக்க அழற்கொழுந்தாய்த் தோன்றினள். அரசன் அவளை வணங்கி முன்னர் விடுத்துப் பின்னர்ச் சென்றான். இத் தலத்தெல்லை வந்தவுடன் மணியோசை ஒழிந்தது. அழற்கொழுந்தும் தீர்ந்தது. பூரணியம்மையார் அருள்வாக்கினை உணர்ந்தான் அரசன். இதுவே கடுவனம் என எண்ணினன். சூலதீர்த்தத்தில்

நீராடி யோகீசரையும் ஞானம்பிகையையும் போற்றினன். பலநாட்களாயின. ஒருநாள் அம்மையார் விருத்தவடிவுகொண்டு எதிர்தோன்றி வெண்சோறு விளங்கக் கக்கினள். அது யாங்கணும் பரவியது. அதுகண்ட அரசனும் இது அம்மையின் திருவருள் போலும் என எண்ணி விம்மிதமுற்ருன். வணங்கி விடைபெற்றுச் சென்ருன். அன்றுமுதல் சோழநாடு முழுதும் நன்செயாயிற்று. நெற்பயிர்கள் நிறைந்தன. காளியினது திருமேனியினின்றும் சிந்திய அழல் வீழ்ந்த இடத்துக் குழியாயிற்று. அதில் நீர்நிறைந்தது. அது முதற்கொண்டு **சுவாலா தீர்த்தம்** என வழங்கப்படுகிறது. காளியும் இத்தலத்தைக் காவல் புரிவாளாயினள்.

**இலக்குமி:—** இரணியனல் ஏற்படுகின்ற துன்பத்தைப் பொறுக்கமுடியாத தேவர்கள் விஷ்ணுவினிடம் முறையிட்டார்கள். விஷ்ணு தன்மகனுக்குயிரளித்த (இத்தலத்து) யோகீசரடியில் வீழ்ந்து வணங்கி, அவராணைப்படியே நரசிங்க வுருவங்கொண்டு, தூணினின்றும் தோன்றி, இரணியனைப் பற்றித் தன் மடிமீதிருத்திக் கூரிய நகங்களாற் பிளந்து, இரத்தத்தைப் பருகினர். அதனல் அடங்காத வெறிகொண்டார். தேவர்களையே துன்புறுத்தத் தொடங்கினர். அதுகண்ட இலக்குமி குகையில் ஒளிந்தனள். தேவர்கள் இறைவனிடம் முறையிட்டார்கள். இறைவன் சரபவடிவுகொண்டு தனதுநகத்தினல் நரசிங்கத்தைக் கோத்தெடுத்துச்

சிறிதுதூரஞ் சென்று கீழே போட்டார். உடனே விஷ்ணுவுக்கு வெறியடங்கியது. இறைவனைவணங்கி இருப்பிடஞ்சென்றார். குகையிலொளிந்திருந்த தன் மனைவியை யழைத்து "நீ எனது வெறிகண்டு அருவருப்புற்று என்னை அகன்றாய். அருவருப் புறினும் கொண்டானைக் கைவிடுவா ரெங்குமில்லை. கைவிட்டபாவம் நீங்குமளவும் உன்னைச் சேரேன்" என்றார். உடனே அவள் நடுநடுங்கினாள். அது கண்ட விஷ்ணு நீ "சிவபூசை செய்யின் இந்நடுக்க மும் பாவமும் நீங்கும்" என்ன, இலக்குமி அவ் வாறே பல தலங்கள்சென்று பூசித்தும் அகன்ற பாடில்லை. இத்தலத்து வந்தாள். வந்தபொழுதே நடுக்கம் தீர்ந்தது. சூல தீர்த்தத்தில் நீராடி யோகீ சரைப் பணிந்து தன்பாவம் தீரப்பெற்றாள்.

**துர்க்கை:—** பிரமன் விஷ்ணு முதலிய தேவர் களுடன் மகிடாசுரன் போர்புரிந்து உலகங்களைத் தன் அடிக்கீழ்ப்படுத்தத் தொடங்கினான். அது கண்ட துர்க்கை இத்தலத்துவந்து சூலதீர்த்தத்தில் நீராடியோகீசரையும் ஞானம்பிகையையும் வணங்கி அவ்வசுரனை வெற்றிகொள்ளும் வரம்பெற்று அவ னுடன் போர்புரிந்தாள். அப்போரில் அவ்வசுர னுக்குத் துணையாகவந்த சும்பன், நிசும்பன் முதலியோர்களையும் அழித்தாள். இறுதியில் மகிடா சுரனை யடைந்து அவன் தலையை அறுத்து வீழ்த் தித் தனது பாதங்களினாலே மிதித்துக் கொன்றாள்.

**அகத்தியர்:—** எவ்வுயிரும் இன்பமுறுதற்கு இமயமலையில் இறைவன் உமையவளைத் திருமணஞ் செய்த காலை மக்கள்யாவரும் இன்று முதல் இன்பத்தில் திளைப்போம் என்று கூறிக்கொண்டு இமயமலையை யடைந்தார்கள். அதனால் தென்புறம் உயர்ந்து வடபுறம் தாழ்ந்தது. இறைவர் 'அது கண்டு பொதியமலையில் போயிரு' என அகத்தியருக்கு ஆணையிட்டனர். அகத்தியர் கலங்கி "எந்தாய்! நினது திருமணத்தை யாவருங்காண யான் மட்டும் காணுதிருத்தல் நன்றோ? என்னபாவஞ் செய்தேன். என்னைத் தள்ளிவிடுதல் வழக்கோ" என்று விண்ணப்பிக்க, கண்ணுதற் கருணைவள்ளலும் "நீ குறுக்கைத் தலத்தை அடைந்து பூசித்து வழிபட்டு நினது விருப்பத்தை முடித்துக்கொள்வாய்" என்றார். முனிவர் அதனைக்கேட்டு மகிழ்ந்து தென்பால்வந்து பொதியமலையி லமர்ந்து பூமியில் அழுந்தும்படி அழுத்தினர். தாழ்ந்த வடபுறம் சமமாயிற்று.

பின்னர் முனிவர் அங்குநின்றும் புறப்பட்டுத் தலயாத்திரை செய்து வருகையில், வழியிலெதிர்ப்பட்ட வில்வலன், வாதாபி ஆகிய இரு அரக்கர்களையும் அழித்தருளினர். இறுதியாக இத்தலத்து வந்தார். ஞானசூலத் தடம்படிந்தார். இறைவனை வணங்கினர். சிறிது வடபால் சிவலிங்கப்பிரதிட்டை செய்து ஓர் தீர்த்தமும் அமைத்து வழிபட்டுவந்தார்.

ஒருநாள் பூசைமுடிவில் தோத்திரஞ் செய்யுங் கால் இறைவன் காட்சியளித்து "நன்று, உனது கருத்துணர்ந்தோம். நிருதி திசையிலுள்ள திரு மணஞ்சேரி சென்று திருக்கலியாண கோலத்தைச் சேவிப்பாய்" என அருளிச்செய்தார். முனிவரும் பன்முறை பணிந்து விடைபெற்று, திருமணஞ்சேரி சென்று மணக்கோலங்கண்டு தரிசித்தார். பின்னர் அங்குநின்றும் புறப்பட்டுப் பொதிய மலையை யடைந்து அங்குத் தமிழாசிரியராக விளங்கினர்.

## 7. தீர்த்தங்கள்

சூல தீர்த்தம், ஞான தீர்த்தம், இலக்குமி தீர்த் தம், இராம தீர்த்தம், பிரம தீர்த்தம், அக்னி தீர்த் தம், அகத்திய தீர்த்தம், ஓம தீர்த்தம், காம தீர்த்தம் முதலிய பல தீர்த்தங்கள் இருக்கின்றன.

**சூலதீர்த்தம்:—** ஆலயத்தின் முன்னர் உள் ளது. மிகச் சிறப்புடையது. இத்தீர்த்தத்தின் பெருமை யுணராது கங்கையினை விரும்பி ஆகா யத்தில் நீட்டிய தீர்க்கவாகு முனிவரின் கரம் குறுகச்செய்தது. பிரமாதிதேவர்களுக்குப் பெரும் பேறு அளித்தது. வெந்த காமனது சாம்பலில் பட்ட மாத்திரையே அவனுக்கு உயிரளித்தது.

**ஞானதீர்த்தம்:—** ஆலயத்தின் வடபுறம் ஓடு கின்றது. தற்காலம் பழவாறுஎன வழங்கப்படு

கிறது. இறைவன் யோகஞ்செய்த காலை திருக்கண்ணினின்றும் வெளிவந்த ஆனந்த அருவி வடகீழ்பக்கமாக ஓடிச்சென்று பெரிய நதியாயிற்று. இது ஞானநதி எனவும் கூறப்படும்.

## 8. தலவிருட்சம்

**கடுக்காய்மரம்:—** ஆலயத்தின் வெளிப்பிராகாரத்தில் (ஸ்ரீ வீரட்டேசுரருக்குப் பின்புறம்) கீழ்புறத்தில் இருக்கிறது.

## 9. வழிபட்டோர்கள்

பிரமன், விஷ்ணு, தேவேந்திரன், இரதி, மன்மதன், காளி, துர்க்கை, இலக்குமி, முருகன், இராகவன், தீர்க்கவாகு முனிவர், சயத்துவசன், அகத்தியர் முதலிய பல்லோர் வழிபட்டுப் பற்பல பேறுகளைப் பெற்றுள்ளார்கள்.

## 10. சுற்றுக்கோயில்கள்

சுற்றுக்கோயில் இருப்பதாகத் தெரியவில்லை.

## 11. மண்டபங்கள்

விசேஷமாகச் சொல்லக்கூடியனவாக மண்டபங்கள் ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை.

## 12. சிற்பங்கள்

சுவாமி கர்ப்பக்கிரகம் வடபுறத்தில் காமன் தேரில் வருதல், பாணமெய்தல், இறைவன் யோ கத்திலிருத்தல் முதலாகிய காமதகன வரலாற்றுச் சிற்பங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன.

## 13. நித்தியபூஜைகளும், திருவிழாக்களும்

காரண காமிக ஆகமப்படி நாடோறும் நான்கு கால பூஜைகள் நடைபெறுகின்றன. மற்றும் வார, மாத, வருஷ ஏறுபடிகளும் நடத்தப்படுகின்றன.

## 14. சொத்துக்கள்

நன்செயில் சுமார் 178-51 ஏக்கரும் புன்செயில் சுமார் 81-71 ஏக்கருமாக நிலங்கள் இருக்கின்றன. அம்மையாருக்கு வெள்ளி நிலையங்கி யிருக்கிறது. சுமார் ரூ 1000 பொறுமானமுள்ள திருவாபரணங் கள் இருக்கின்றன.

## 15. திருப்பணி

வெளவால்நெத்தி மண்டபம் இருபுறமும் தூக்கி வேலைசெய்து கண்ணாடிகள் வைத்தும், ஜன்னல் கள் வைத்தும் கட்டப்பட்டிருக்கிறது. மடைப்பள்ளி

ஒன்று புதிதாகக் கட்டப்பட்டது. குறுகலாகவும் தாழ்ந்தும் இருந்த இரண்டாம் கோபுரவாயிலை இடித்தெடுத்து அகலமாகவும் உயரமாகவும் அமைத்து வேலைசெய்யப்பட்டிருக்கிறது. தென் மேற்கு மூலையில் காரியாலயமும் களஞ்சியமும் ஒருங்கு அமைய ஒருகட்டிடம் கட்டப்பெற்றது. உள்மண்டபம் முழுவதும் மேல்தளம் கொத்திக் கல் பரப்பி வெள்ளை வைக்கப்பெற்றது.

## 16. சமயப்பணி

நவராத்திரிபோன்ற விசேஷ நாட்களில் புலவர்களைக் கொண்டு சமயச் சொற்பொழிவுகள் செய்விக்கப்படுகின்றன. இத்தலத்திற்குக் குறுங்கை விநாயகர் சிறப்புள்ள மூர்த்தியாதலால் "**விநாயகர் அகவல்கள்**" என்ற சிறுநூல் அச்சிட்டு வழங்கப் படுகின்றது.

## 17. நிர்வாகம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீன பரிபாலனத்திற்கு உட்பட்ட தேவஸ்தானங்களுள் ஒன்று. ஆதீன கர்த்தரவர்களாக எழுந்தருளி யிருக்கும் **ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்** அவர்கள் ஆதீன கர்த்தா ஸ்தானத்தை வகிக்க ஆரம்பித்தது (26-6-33) முதல்

இவ் வாலயத்தையும் பரிபாலனம் செய்து வருகின்றார்கள்.

## 18. கல்வெட்டுக்கள்

சுவாமிகோயில் மகாமண்டபத்தில் பல கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. கல்வெட்டிலாகா அதிகாரிகள் 1917-ம் ஆண்டில் 215–244 எண்ணுள்ள கல்வெட்டுக்களாகப் படிஎடுத்துள்ளார்கள்.

## 19. புராணங்களும் திருப்பாடல்களும்

திரிசிரபுரம் மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களால் இயற்றப்பட்ட தலபுராணம் இருக்கிறது. 1920-ம் ஆண்டில் தருமபுர ஆதீன உதவியினால் வெளிவந்துள்ளது. 736-திருவிருத்தங்கள் கொண்டது. திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச்செய்த திருப்பதிகம் இரண்டு உள்ளன.

திருச்சிற்றம்பலம்

ஆதியிற் பிரம னார்தாம் அர்ச்சித்தா ரடியி ணைக்கீழ்
ஓதிய வேத நாவ ருணருமா றுணர லுற்றார்
சோதியுட் சுடராய்த் தோன்றிச் சொல்லினை யிறந்தார் பல்பூக்
கோதிவண் டறையுஞ் சோலைக் குறுக்கைவீ ரட்ட னாரே.

நீற்றினை நிறையப் பூசி நித்தலும் நியமஞ் செய்து
ஆற்றுநீர் பூரித் தாட்டும் அந்தண னாரைக் கொல்வான்
சாற்றுநா ளற்ற தென்று தருமரா சற்காய் வந்த
கூற்றினைக் குமைப்பர் போலுங் குறுக்கைவீ ரட்ட னாரே.

தழைத்ததோ ராத்தி யின்கீழ்த் தாபர மணலாற் கூப்பி
அழைத்தங்கே ஆவின் பாலைக் கறந்துகொண் டாட்டக் கண்டு
பிழைத்ததன் தாதை தாளைப் பெருங்கொடு மழுவால் வீசக்
குழைத்ததோ ரமுத மீந்தார் குறுக்கைவீ ரட்ட னாரே.

சிலந்தியும் ஆனைக் காவிற் றருநிழற் பந்தர் செய்து
உலந்தவன் இறந்த போதே கோச்செங்க ணானு மாகக்
கலந்தநீர்க் காவிரிசூழ் சோணாட்டுச் சோழர் தங்கள்
குலந்தனிற் பிறப்பித் திட்டார் குறுக்கைவீ ரட்ட னாரே.

ஏறுட னேழ டர்த்தா னெண்ணியா யிரம்பூக் கொண்டு
ஆறுடைச் சடையி னானை அர்ச்சித்தா னடியிணைக்கீழ்
வேறுமோர் பூக்குறைய மெய்ம்மலர்க் கண்ணை மிண்டக்
கூறுமோ ராழி யீந்தார் குறுக்கைவீ ரட்ட னாரே.

கல்லினா லெறிந்து கஞ்சி தாமுணுஞ் சாக்கியனார்
நெல்லினார் சோறு ணாமே நீள்விசும் பாள வைத்தார்
எல்லியாங் கெரிகை யேந்தி எழில்திகழ் நட்ட மாடிக்
கொல்லியாம் பண்ணு கந்தார் குறுக்கைவீ ரட்ட னாரே.

காப்பதோர் வில்லும் அம்புங் கையதோர் இறைச்சிப் பாரம்
தோற்பெருஞ் செருப்புத் தொட்டுத் தூயவாய்க் கலசம் ஆட்டித்
தீப்பெருங் கண்கள் செய்ய குருதிநீ ரொழுகத் தன்கண்
கோப்பதும் பற்றிக் கொண்டார் குறுக்கைவீ ரட்ட னாரே.

நிறைமறைக் காடு தன்னில் நீண்டெரி தீபந் தன்னைக்
கறைநிறத் தெலிதன் மூக்குச் சுட்டிடக் கனன்று தூண்ட
நிறைகடல் மண்ணும் விண்ணும் நீண்டவா னுலக மெல்லாங்
குறைவறக் கொடுப்பர் போலுங் குறுக்கைவீ ரட்ட னாரே.

அணங்குமை பாக மாக அடக்கிய ஆதி மூர்த்தி
வணங்குவா ரிடர்கள் தீர்க்கும் மருந்துநல் லருந்த வத்த
கணம்புல்லர்க் கருள்கள் செய்து காதலா மடியார்க் கென்றுங்
குணங்களைக் கொடுப்பர் போலுங் குறுக்கைவீ ரட்ட னாரே.

எடுத்தன னெழிற்கயிலை இலங்கையர் மன்னன் தன்னை
அடுத்தொரு விரலா லூன்ற அலறிப்போ யவனும் வீழ்ந்து
விடுத்தனன் கைந ரம்பால் வேதகீ தங்கள் பாடக்
கொடுத்தனர் கொற்ற வாளாள் குறுக்கைவீ ரட்ட னாரே.

---

நெடிமால் பிரம னோடு நீரெனும் பிலயங் கொள்ள
அடியொடு முடியுங் காணா ரருச்சுனற் கம்பும் வில்லும்
துடியுடை வேட ராகித் தூயமந் திரங்கள் சொல்லிக்
கொடிநெடுந் தேர்கொ டுத்தார் குறுக்கைவீ ரட்ட னாரே.

ஆத்தமாம் அயனு மாலும் அன்றிமற் றொழிந்த தேவர்
சோத்தமெம் பெருமா னென்று தொழுதோத் திரங்கள் சொல்லத்
தீர்த்தமாம் அட்ட மீமுன் சீருடை யேழு நாளுங்
கூத்தராய் வீதி போந்தார் குறுக்கைவீ ரட்ட னாரே.

திருச்சிற்றம்பலம்

— திருநாவுக்கரசு சுவாமிகள்.

கண்ணுதல் யோகி ருப்பக் காமன்கின் றிடவேட் கைக்கு
விண்ணுறு தேவ ராதி மெலிந்தமை ஓரார் மால்தான்
எண்ணிவேள் மதனை ஏவ எரிவிழித் திமவான் பெற்ற
பெண்ணினைப் புணர்ந்து யிர்க்குப் பேரின்ப மளித்த தோரார்.

—அருணந்தி சிவம்.

## 20. திருப்பாடல்களிற் காணப்படும் சில வரலாறுகள்.

*1. பிரமன்:—* இவன் யானே பெரியவன் என்று தன் தந்தையு (விஷ்ணுவு)டன் வாது செய்து கலகமிடுங்காலத்தில் இறைவன் இருவருக்கும் நடுவே அனல்வடிவாய்த் தோன்றினன். கண்ட இருவரும் சபதம் செய்துகொண்டு பிரமன் முடியினைத் தேடுதற்குப் புறப்பட்டான். மாயன் கீழ்நோக்கினன். மேற்சென்ற பிரமன் களைப்புற்று இடையே கண்ட தாழையினைத் துணைகொண்டு பொய் புகல இறைவர் 'படைப்புத் தொழிலை இழக்க' எனச் சபித்தார். பிரமன் அஞ்சி உய்வு பெறுதற்கு அவராணைப்படியே இத்தலத்து வந்து வழிபட்டு இழந்த தன்தொழிலை மீட்டும்பெற்றான்.

*2. மார்க்கண்டர்:—* இவர் தமக்குப் பதினாறு வயதென அறுதியிட் டிருப்பதை உணர்ந்தார். சிவபூசை செய்தலே அதற்குபாயம் என உட்கொண்டு, நியமந்தவறாது பூசித்து வந்தார். கால அளவு முடிந்தவுடன் இயமன் குறுகினன். அச்சமயத்தில் சிவபூசை செய்து கொண்டிருந்தார். கண்டு இறைவனைக் கட்டியணைத்தார். இயமன் வீசிய பாசம் இறைவன்மீதும் பட்டது. உடனே இறைவன் சிவலிங்கத்தினிடையே சூலத்துடன் தோன்றி இயமனை உதைத்துக் கொன்று, இவருக்கும் "என்றும் பதினாறு வயதுடன் விளங்குக" எனத் திருவருள்செய்தார்.

**3. சண்டேசர்:—** ஆயர்கள் பசுக்களை அடித்து வருத்துதலைக்கண்டு தாமேமேய்க்கத் தொடங்கினர். அன்றுமுதல் ஆற்றின் கரையில் மணலினல் இலிங்கந்தாபித்து ஆவின்பாலைக் கறந்து அபிஷேகித்து வந்தார். உண்மை யுணராத தந்தை சிவபூசைக்கு இடையூறு செய்ய, இவர் பக்கத்திருந்த கோலையெடுத்து வீசினர். அது மழுவாகிக் காலை வெட்டியது. இறைவன் காட்சியளித்துத் தம் பொருட்டுப் பிதாவின்காலை வெட்டியதால் தாமே தந்தையாகி, சண்டேசுர பதம் அருளித்தனர்.

**4. கோச்செங்கணன்:—** முற்பிறவியில் சிலந்தி உருவம் பெற்றிருந்தார். ஆனைக்காவில் இலிங்கத்தின் மீது சருகு முதலியன உதிரா வண்ணம் வாய்நூலினலே மேற்கட்டி அமைத்தது. அதனை அநுசிதம் எனக்கருதிய வெள்ளானை அதனை அழித்து வழிபட்டு வந்தது. அது கண்ட சிலந்திக்குக் கோபம்வந்தது. யானையினது துதிக்கையில் புகுந்து கடிக்க, யானை கையை மோதிக் கொண்டு விழுந்து இறந்தது. மோதியதால் சிலந்தியும் இறந்தது. அச்சிலந்தியே மறுபிறப்பில் (நாயன்மார்களில் ஒருவராகிய) கோச்செங்கணன்.

**5. திருமால்:—** இவர் இறைவனை நாடோறும் ஆயிரம் பூக்கொண்டு அருச்சிப்பது வழக்கம். திருவருளால் ஒருநாள் ஒன்று குறைந்தது. உடனே தனது கண்ணைப்பறித்துச் சாத்தினர். அன்பின்

பெருக்கைக் கண்ட இறைவர் சக்கரப்படையை அளித்தார்.

**6. சாக்கியர்:—** எந் நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும் சங்கரன்தாள் மறவாமையே பொருள் எனக்கருதித் தான்கொண்ட பௌத்த மதத்திலிருந்தே சிவபெருமான் மகிமையை யுணர்ந்து நாடோறும் செய்வது தெரியாமல் கல் எறிந்து வழிபட்டுவந்தார். ஒரு நாள் மறந்து உணவு அருந்தும்போது நினைவுக்கு வந்தது. ஓடிவந்து அன்புடனே கல்லை எடுத்து எறிந்தார். இறைவன் காட்சிகொடுத்து அருள் பாலித்தார்.

**7. கண்ணப்பர்:—** வேடர் குலத்தவர். ஒரு நாள் வேட்டைக்கு செல்லுங்கால் மலைமீது இலிங்க உருவினைக்கண்டார். அன்புமயமானார். மாமிசத்தை நிவேதித்தார். ஒருநாள் இறைவரது கண்ணினின்றும் குருதிவரக் கண்டார். நடுங்கினார். கையிலுள்ள அம்பினால் தமது கண்ணைப்பிடுங்கி இறைவருக்குச் சாத்தினார். மற்றொரு கண்ணிலும் அவ்வாறே வர தமது மற்றொரு கண்ணைப் பிடுங்க முற்பட்டார். உடனே இறைவன் காட்சியளித்து தமது வலப் பக்கத்திலே இருத்தினர்.

**8. மாவலி:—** முற்பிறவியில் எலி. வேதவனத்தில் இறைவரது ஆலயத்திலுள்ள நெய் விளக்குத் தூண்டுவாரின்றி மங்கும் சமயம் நல்

வினைப்பயனால் விளக்கிலுள்ள நெய்யை உண்ண வந்தது. மூக்கைச்சுட்டது. மூக்கை அசைக்க, அது காரணமாக விளக்குத் தூண்டப்பட்டு ஒளி பிரகாசித்தது. இச்சிவப்பணியின் பயனால் மறுபிறவியில் மாவலிச் சக்ரவர்த்தியாகப் பிறந்து மூவுலகையும் அரசாட்சி செய்தது.

9. **கணம்புல்லர்:—** நாடோறும் சிதம்பரத்திலுள்ள திருப்புலீச்சரத்தில் திருவிளக்கு இட்டுப் பணிபுரிந்து வந்தார். திருவருளால் ஒருநாள் பணி முட்டுப்பட்டது. காரணம் அரிந்துகொண்டு வந்த கணம்புல் விலைப்படாமையே. என்செய்வார்! அப்புல்லினையே எரித்தார். அதுவும் போதவில்லை. தமது முடியை எரித்து ஒளிசெய்தார். இறைவன் காட்சியளித்து திருவருள்பாலித்தார்.

10. **இராவணன்:—** இறைவன் பெருமையையுணராது, தனது போக்குக்குத் தடைசெய்ததால் அவர் எழுந்தருளியிருக்குங்கயிலை மலையை, பெயர்க்கத் தொடங்கினான். அதுகண்ட இறைவர் தமது திருவடியிலுள்ள ஒரு விரலை அழுத்த இராவணன் பாரம் பொறுக்காமல் அலறி வீழ்ந்து, தனது கையிலுள்ள நரம்பை எடுத்து ஒலியுண்டாக்கி வேதகீதங்கள் பாடினான் கருணைவள்ளலாகிய பரமன் மனமிரங்கி வாழ்நாளளித்து அருள்பாலித்தான்.